விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 178 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 01 புதன்கிழமை (15.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில்

## பலாலி விமான நிலைய செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு பிரதமர் பணிப்பு



(கொழும்பு)

இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டு பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### பணம் செலுத்தப்பட்டது

## எரிவாயு விநியோகம் சில நாட்களில் சீராகும்

(கொழும்பு)

எரிவாயுவுக்கான பணம் செலுத்தப்பட்டதனால் சில நாட்களில் லிட்ரோ எரிவாயு விநியோகம் சீராக இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிவாயுவை ஏற்றிய கப்பலுக்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

அதன் படி, 15

### திருடர்கள் இருக்கும்வரை

# டொலர்கள் கிடைக்காது

### ஜே.வி.பி தலைவர் அநுரகுமார



(கொழும்பு)

நாட்டில் திருடர்கள் ஆட்சி செய்யும்வரை இலங்கைக்கு டொலர்கள் கிடைக்கப்பெறமாட்டாது என ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலையில் ஆலயம் சென்ற மூதாட்டி

### மயங்கி விழுந்து மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சரசாலை தெற்கில் ஆலயத்துக்குச் சென்ற மூதாட்டி ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. 15

## கொடிகாமத்தில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் நகரை அண்மித்த கொயிலாமனை சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

ஏ9 வீதியால் துவிச்சக்கரவண்டியில் 15

### 24ஆம் திகதிக்குப் பின்னர்

## எரிபொருட்களின் விலைகள் மீண்டும் உயர்த்தப்படலாம்

(கொழும்பு)

எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைவாக ஜூன் 24ஆம் திகதி எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படலாம் என எரிசக்தி அமைச்சின் செயலாளர் பத்திரண தெரிவித்துள்ளார்.

விலைச் சூத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைவாக எரிபொருள் விலைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் 15

### அரச ஊழியர்களுக்கு

## வெள்ளி விடுமுறை வழங்க அமைச்சரவை அனுமதி

### இவ்வாரம் முதல் நடைமுறைக்கு

(கொழும்பு)

இந்த வாரத்தில் இருந்து அரச ஊழியர்களுக்கு வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் 15

### பொருட்களின் விலைகளை

## பழைய மட்டத்துக்கு கொண்டுவர முடியாது

### வருமான அதிகரிப்பே வழி - ரணில்

(கொழும்பு)

2019ஆம் ஆண்டில் இருந்த பொருட்களின் விலைகளை மீண்டும் அதே மட்டத்திற்கு கொண்டுவர முடியாது எனவும், படிப்படியாக வருமானத்தை அதிகரிப்பதே செய்யக்கூடிய ஒரே வழிமுறை எனவும்பிரதமர்ரணில் விக்கிரமசிங்க தெரி 15

## அரிசி மோசடியாளர்களை சுற்றிவளைக்க பாதுகாப்புத் தரப்பின் உதவிபெற நடவடிக்கை

### அமைச்சர் மகிந்த அமரவீர



(கொழும்பு)

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்சபட்ச சில்லறை விலையை விடவும் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்கள் மற்றும் அரிசியைப் பதுக்கி வைப் [illegible] வளைப்புக்களை துரிதப்படுத்துமாறு அமைச்சர் மகிந்த அமரவீர, நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அகில இலங்கை தொழிலற்றோர் சங்கத்தினருடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய சில கட்சிகள்

## ஐ.தே.கவுடன் இணைய தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகள் உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் தம்முடன் இணைந்து கொள்வதற்குத் தீர்மானித்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் தேசிய கட்சி, தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி, முற்போக்கு மக்கள் சேவையாளர் கட்சி, ஸ்ரீ ரெலோ, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம், ஐக்கிய இலங்கை முன்னணி, இலங்கை ஐக்கிய சமாதான கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நடைபெற்றுள்ளது.

நாட்டுக்குப் பயனுள்ள அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க குறித்த கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

# இலங்கையில் உருவாகியுள்ள சர்ச்சையால் ஏமாற்றம்

## அதானி குழுமம் தெரிவிப்பு

(டில்லி)

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம் குறித்து உருவாகியுள்ள சர்ச்சையால் ஏமாற்றமடைந்துள்ளதாக இந்தியாவின் அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

பெறுமதிமிக்க அயல்நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதே எங்கள் முதலீட்டின் நோக்கம். பொறுப்புணர்வுள்ள பெருநிறுவனம் என்ற அடிப்படையில் எங்கள் தேசங்கள் எப்போதும் பகிர்ந்துகொண்டுள்ள இணைந்த செயற்பாட்டின் முக்கியமான அம்சமாக நாங்கள் இதனைக் கருதுகின்றோம் என அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

உருவாகியுள்ள இந்த சர்ச்சை காரணமாக நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம். உண்மை என்னவென்றால் இந்த விடயத் திற்கு அரசாங்கத்திற்குள் தீர்வு காணப்பட்டுள்ளது எனவும் அதானி குழுமம் தெரிவித்துள்ளது. (ம-7)

# பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான

## திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான மறுசீரமைக்கப்பட்ட புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் மறுசீரமைக்கப்பட்டுள்ள இந்த சுற்றறிக்கை, அடுத்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

அதன்படி, அடுத்த வருடத்திலிருந்து பாடசாலைக்கு மாணவர்களை உள்ளீர்ப்பது இந்த சுற்றுநிருபத்திற்கு அமைய இடம்பெறும்.

பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்காக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்தும்போது ஏற்பட்ட பிரச்சினைகளை குறைப்பதற்காகவே புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்ந்து புதிய சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# இந்தியாவிடமிருந்து மேலும் 50 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கைக்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் 50 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவது தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் தற்சமயம் கலந்துரையாடல் இடம்பெறுவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம் அறிவித்துள்ளது. இலங்கை முகம் கொடுத்துள்ள பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியா இதுவரை இலங்கைக்கு 350 கோடி டொலர் நிதியுதவி வழங்கியுள்ளதாகவும் உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# பெரமுன நிலைக்காது - விமல்

(கொழும்பு)

நாட்டின் அரசியலில் தொடர்ந்தும் நிலைத்திருக்கக்கூடிய வல்லமை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு இல்லை என தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சியொன்றில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)


# மரண அறிவித்தல்



## சின்னமணி பேரின்பவதி

பாடசாலை வளவு கரணவாய் கிழக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னமணி பேரின்பவதி அவர்கள் நேற்று (14.06.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சந்தனம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னமணியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் மணிசுந்தரம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்புச் சகோதரியும் ஸ்ரீதரன் (பண்ணை முகாமையாளர்- யாழ். பல்கலைக்கழகம்), தேவகி (ஆசிரியை - யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), ஸ்ரீகரன் (சுவிஸ்லாந்து), ஸ்ரீஜெகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் முரளிகரன் (விஜி வீடியோ விஷன்), சத்தியமதி (பிரதேச செயலகம், சங்கானை), தயாளினி, சத்தியபாமா (அபிவிருத்தி உத்தியோகத்தர்- விவசாயத் திணைக்களம், நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சைதன்யா, சைதன்யன், சாகித்தியன், மகிஷா, மகீஷன், மதுஷன், துஷாந், சஜீஷன், சங்கஜன், வம்சியா, ஸ்ரீகர்னி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (15.06.2022) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (C-4495) தகவல் குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 05 . 11 . 1953



ஆண்டவன் அடியில் 16 . 05 . 2022

## அமரர் கந்தையா சிவஞானம் (சிவம்)

கடந்த 16.05.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாளை நினைவுகூரும் வேளையில் இத்துயரச் செய்தி கேட்டு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கட்கும் தாயகம், புலம்பெயர் தேசங்களில் இருந்து தொலைபேசி, சமூகவலைத்தளம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மற்றும் பதாகை மூலம் தமது அனுதாபத்தையும் அன்பையும் தெரிவித்த உறவுகள், நண்பர்கட்கும் அன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள், உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று 15.06.2022 புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு,
பத்தானை. (C-4494) குடும்பத்தினர்


# ஸ்டாலினுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இராமேஸ்வரம் இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தக் கோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் கோரிக்கைக் கடிதம் ஒன்றை கையளிக்க வடக்கு கடற்றொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

அதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அ.அன்னராசா இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் பணவீக்கத்தால்

## பாணின் விலை 1500 ரூபாவை தாண்டும்

(கொழும்பு)

**பணவீக்கம் தொடர்ந்தும் அதிகரித்தால், எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் ஒரு இறாத்தல் பாணின் விலை ஆயிரத்து 500 ரூபாவுக்கும் மேல் அதிகரிக்கும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.**



தற்போது 100 ரூபாவில் முச்சக்கர வண்டியில் செல்லும் பயணத்திற்கு டிசெம்பர் மாதம் 1,790 ரூபாய் செலவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதித பணவீக்கம் என்ற நிலைமையானது மிகவும் பயங்கரமானது. இதனால், அதிகரித்து வரும் நிலைமையை தடுக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த மார்ச் மாதம் பணவீக்கம் 18.2 வீதமாக இருந்ததுடன் ஏப்ரல் மாதம் 30 வீதமாக அதிகரித்தது.

இந்த மாதம் 33.3 வீதமாக இருக்கின்றது. மாதாந்தம் பணவீக்கமானது 30 வீதம் என்ற கணக்கில் அதிகரித்தால், 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் பொருளின் விலை டிசெம்பர் மாதத்தில் 1,790 ரூபாவாக அதிகரிக்கும்.

பாணின் விலை டிசெம்பர் மாதத்தில் 1,790 ரூபாவாக அதிகரிக்கும். இதனால், என்ன நடக்கும், இது அனைத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சுனில் ஜயரத்ன கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அந்நிய செலவனி பற்றாக்குறை மற்றும் பணவீக்கம் காரணமாக அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும்' அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வடமராட்சி வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுங்கள்

## நுகர்வோர் அதிகார சபையிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

யாழ்.மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் வடமராட்சி பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரசினால் அரிசியின் விலை நிர்ணயிக்கப்பட்ட போதிலும் வடமராட்சி பகுதியில் பல அரிசி ஆலைகள் அரிசியை பதுக்கி மூடப்பட்டுள்ளது. அதேநேரம் வர்த்தக நிலையங்கள் எவற்றிலும் அரிசியின் விலைகள் காட்சிப்படுத்தப்படவில்லை.

நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் 3100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. வீட்டிற்கு சென்று பணம் எடுத்து திரும்பி வர்த்தக நிலையத்திற்கு வருகை தந்து அரிசியை பெற முற்பட்ட போது 3200 ரூபாய் என விலை உயர்வடைந்துள்ளதாக பொதுமகன் தெரிவித்துள்ளார். வடமராட்சி பகுதியில் பல வர்த்தக நிலையங்கள் தமக்கு விரும்பிய விலைகளில் பொருட்களை விற்பனை செய்கின்றன.

பொதுமக்கள் அரிசி கோதுமை மாவு போன்றவை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தினக்கூலி வேலை செய்யும் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்கள். (4-60)

## அரச ஊழியர்கள்

# தடையின்றி வெளிநாடு செல்ல அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரச ஊழியர்கள் தடையின்றி வெளிநாடு செல்வதற்கு ஏதுவாக தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, தற்போது படிப்பு அல்லது வேலை வாய்ப்புக்காக சேவையாற்றும் அரச ஊழியர்கள் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் தங்கள் பதவிக் காலத்தில் வெளிநாடு செல்ல முடியும்.

இத்திருத்தத்தின் கீழ், தற்போதுள்ள விதிகள் திருத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊழியரின் ஓய்வூதியக் கணக்கீடு உள்ளிட்டவற்றை பாதிக்கும் விதிகள் தளர்த்தப்படும்.

அத்தகைய திருத்தப்பட்ட விதிகள் அடங்கிய சுற்றறிக்கையை விரைவாக வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# முழுமையாக முடங்கும் தனியார் பேருந்து சேவை



(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக, அடுத்த வாரத்தில் தனியார் பேருந்து சேவை முழுமையாக முடங்கும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

'இலங்கை போக்குவரத்துச் சபையினால் வழங்கப்படும் டீசல் தற்போது பற்றாக்குறையாக உள்ளது. டீசல் இன்மையால், நேற்று முன்தினம் பெருமளவான பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை.

இனிவரும் நாட்களில் இந்த நிலைமை மேலும் உக்கிரமடையும். எரிபொருள் வழங்கப்படாமையால் அடுத்த வாரம் தனியார் பேருந்து சேவை முழுமையாக முடங்கும்' இதேநேரம் அடுத்த வாரத்தில் பாடசாலை போக்குவரத்து சேவைகளும் கைவிடப்படும் அபாயம் உள்ளதாக அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் டி சில்வா தெரிவித்துள்ளார்.

டீசலை பெற்றுக்கொள்வது கடினமாக உள்ளது எனவும் அதன் காரணமாக பாடசாலை பேருந்து சேவையில் இருந்து பலர் விலகியுள்ளதாக தெரிவித்தார். (நி)

# 400 ரூபாய் வரை அரிசி விலை அதிகரிக்கும்

## முன்னாள் சபாநாயகர் கரு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் ஒரு கிலோ அரிசியின் விலை 400 ரூபாவை தாண்ட வாய்ப்புள்ளதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வரும் அத்தியாவசிய பொருட்களுக்கான விலை தொடர்பில் டுவிட்டர் பதிவொன்றினை இட்டு இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் தற்போது உணவுப் பொருட்களின் விலைகள் விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்வடைந்து வருகின்றது.

அரசாங்கம் இது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அடுத்த சில வாரங்களில் அரிசியின் விலை ரூ.400 ஐ தாண்ட வாய்ப்புள்ளது. எனவே அனைவரும் அடிப்படை உணவுப் பொருட்களைப் பெற தீவிர தலையீடு அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வறிய குடும்பங்களுக்கு நிதி உதவி சமுர்த்தி திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக வங்கியின் ஒத்துழைப்பின் கீழ் நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நிதி உதவியை வழங்கும் நோக்கில் 3 மாத கால வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக சமுர்த்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் கீழ் குடும்பமொன்றுக்கு மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்காக 5,000 ரூபா முதல் 7,500 ரூபா வரையான நிதி உதவி வழங்கப்படும் என சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார். (நி)

# வெள்ளி விடுமுறை இவர்களுக்கு இல்லை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை கவனத்தில் கொண்டு வெள்ளிக்கிழமைகளில் அரச பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனினும், சுகாதார, மின்சக்தி, எரிபொருள், பாதுகாப்பு, கல்வி மற்றும் இதர அத்தியாவசிய சேவைகள் வழமைபோல் இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

சேவை நலன் பாராட்டு

திருமதி.வைதேகி கனகராஜா

58 ஆவது அகவையில் இளைப்பாறும் எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி.வைதேகி கனகராஜா அவர்களை இந்நாளில் (15.06.2022) சிறப்போடு, மகிழ்வுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



Best Wishes

(F-4492)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## STR cool டென்னிஸ் போட்டி

# யாழ். மாவட்ட வீரர்கள் முதன்முறையாக வெற்றி



இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட STR Cool Tennis இன் 10 வயதிற்கு உட்பட்ட தனி நபர்களுக்கான டென்னிஸ் போட்டிகளில் யாழ்.மாவட்ட வீரர்கள் முதன்முறையாக தமது வெற்றிகளை பதிவு செய்துள்ளனர்.

கடந்த 10ஆம்,11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தில் இப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் 8 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஜெ.நர்ஸ்வின் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

7 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ரா.ஆரோன் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

7 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவி வி.அஸ்விதா இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார். (4-33)

## மே மாதத்தின் சிறந்த வீரராக

# மத்தியூஸ் தெரிவு



மே மாதத்திற்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த வீரராக இலங்கை அணியின் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் சர்வதேச அளவில் சிறப்பாக செயற்படும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை தேர்ந்தெடுத்து ICC விருது வழங்கி வருகிறது.

ஜனவரி மாதம் முதல் 3 மாதங்கள் தொடர்ந்து இந்திய வீரர்கள் இந்த விருதினை பெற்றுக்கொண்டனர்.

கடந்த ஏப்ரல் மாதத்திற்கான விருது பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாமிற்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் மே மாதத்திற்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த வீரராக இலங்கை அணியின் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷிற்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில், அஞ்சலோ மத்தியூஸ் இரண்டு சதங்கள் உட்பட 344 ஓட்டங்களை குவித்திருந்தார். (4)

## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2638

**தீபா**

கடுமையான கஞ்சத்தனம்,
தகுதியற்ற தற்பெருமை,
எல்லையற்ற பேராசை
ஆகிய மூன்றும்
மனிதனை வீணாக்கி விடும்

**வாகீசன்**



முதலில்
வேலைக்காரனாக
இருக்கக்
கற்றுக் கொள்.
எஜமான் ஆகும்
தகுதி,
தானாகவே
வந்து விடும்.

**துளசி**

பேச்சுலர் வாழ்க்கை தான் ஜாலியானது மச்சான்




பொண்ணு கிடைக்கலனு சொல்லி தொலடா மூதேவி



**மதீசன்**

நம்பி ஏமாந்தவர்கள் மட்டுமல்ல...
நல்ல மனிதர்களை நம்பாமல்
ஏமாந்தவர்களும் உண்டு
உலகில்

**அபி**

மனதால் எவ்வளவு
பலமானவர்களையும்
அழ வைக்கும்
ஒரே ஆயுதம்
உண்மையான அன்பு

**பகலவன்**

ஆடத் தெரியாத மயில்கள் இல்லை
கூவத் தெரியாத குயில்கள் இல்லை
நீந்தத் தெரியாத மீன்கள் இல்லை
ஓடத் தெரியாத மான்கள் இல்லை
ஆனால் வாழத் தெரியாத
மனிதன் இருக்கிறான்
வாழத் தெரியாமலேயே
மாண்டு விடுகிறான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீட்க எம்முடன் இணையுங்கள் கூட்டமைப்பை அழைக்கும் சம்பிக்க

(கொழும்பு)

"நாட்டை மீட்பதற்கான பயணத்தில் அனைவரும் இணைய வேண்டும்" என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "தற்போதைய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றது. ஜூலை முதல் வாரமளவில் ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்படும் என எதிர்பார்கின்றோம். ஆனால் அதன் மூலம் அனைத்துப் பிரச்சினைகளும் தீராது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நகர்வுகள் தோல்வி அடைந்தால் நாட்டை மீட்பதற்கான மாற்றுத் திட்டத்தை முன்வைக்க நாம் தயார்.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல கட்சிகளில் நல்லவர்கள் உள்ளனர். அவர்களும் நாட்டை மீட்பதற்கான பயணத்தில் இணைய வேண்டும். நபர்கள் முக்கியம் அல்ல, நாடு தான் முக்கியம்" என அவர் தெரிவித்தார். (நி)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர்.பூ.க.இராசரத்தினம்



எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளைத் தலைவருமான

**அமரர்.பூ.க. இராசரத்தினம்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு கல்லூரிச் சமூகம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதுடன் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம் 11875

அதிபர், ஆசிரியர்கள்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 05 - 1949



இறப்பு 06 - 06 - 2022

### டாக்டர் புண்ணியமூர்த்தி ஸ்ரீபாலேந்திரா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஹற்றனை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த டாக்டர் ஸ்ரீபாலேந்திரா அவர்கள் 06.06.2022 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் அமரர்களான புண்ணியமூர்த்தி, தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான கனகரத்தினம், சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌரியின் அன்புக் கணவரும், பிரசாந்தன், ஷர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரொஷானியின் அன்பு மாமனாரும், ரித்தேஷ், ஷேன்ஹரியின் அன்புப் பேரனும், அமரர்களான ஸ்ரீனிவாசன், ஸ்ரீசரவணபவன் மற்றும் ஸ்ரீகாந்தன், நிமலவேணி-நடராசா, ஸ்ரீவிக்னேஸ்வரன், கமலவதனி-தவபாலன், ஆறுமுகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 07.06.2022 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொட்டகலை மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (11872)

ஹற்றன்

தகவல் : குடும்பத்தினர்
மகன் : 077 751 2344
சகோதரர் : 077 869 3053

## மரண அறிவித்தல்



### திருமதி.கந்தசாமி இராசம்மா

கடந்த 2022.06.12 ஆம் திகதி காலமான எமது குடும்ப விளக்கு திருமதி.கந்தசாமி இராசம்மா அவர்களின் இறுதிக் கிரியைகள் 2022.06.16 ஆம் திகதி நாளை வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4.00 மணிக்கு பூதவுடல் சோனப்பு சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி-4491)

அந்திரான்,
நெல்லியடி,
கரவெட்டி.

தொ.பே :
021 226 3755
077 359 3445

தகவல் :
சி.கந்தசாமி
சட்டத்தரணி.

## இராசிபலன்

15.06.2022
ஆனி 01, புதன்கிழமை
பிரதமை பிற்பகல் 3.31 மணிவரை

மூலம் பிற்பகல் 5.47 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை

சந்திராஷ்டமம் - கார்த்திகை, ரோகினி

வளவன்




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசியைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலம் பற்றிய கவலை உருவாகி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், களஸ்திர நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறையலாம்.




பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.




கடன் சுமை குறையும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சோம்பலை விளக்குவது நல்லது.




திட்டமிட்ட காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.




செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பு உயரும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பெண் வழி ஒத்துழைப்புண்டு.

நன்கு அறிந்து கொள்வதே நம்பிக்கையினும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரிக்கு இன்று அகவை 89

தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைவர்களில் ஒருவரான ஆனந்த சங்கரியின் 89 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

தமிழ் அரசியல் தலைவர்களில் சிரேஷ்டமானவர். அடக்கமாக காரியம் ஆற்றுவதில் மிகச் சிறந்தவர். இன்னும் தனது சக்திகளைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் நலனுக்காக இரவு-பகல் என்றும் பாராமல் பயணம் செய்து குரல் கொடுத்து வருகிறார்.

தனது சிறு வயதில் இருந்தே சமூக நலனுக்காக தன்னை அர்ப்பணித்து மானிட நலனுக்காக கடந்த 60 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகிறார்.

வல்ல இறைவன் அவருக்கு தேக நலனையும் நீண்ட ஆயு ளையும் வழங்கி எம் மக்களின் விடிவுக்காக அவருடைய பங்களிப்பை வழங்கி வைப்பான் என்று நம்புகிறோம்.

மேலும் அவர் எம் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் மிக விசாலமானது.

எப்போதும் சாந்த குணத்துடன் காந்தி மகான், தந்தை செல்வா போன்று அகிம்சாவாதிகளின் வழியை உறுதியாக பின்பற்றி இன்றும் துணிச்சலுடன் செயற்பட்டு வருகிறார்.

அவர் மாற்று அரசியலை கையாண்டு இருந்தால் இன்றும் தமிழ் மக்களின் அதிகார அரசியலில் பலமான ஒருவராக விளங்கியிருப்பார்.

நேர்மையான அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அவர்



என்றும் நேர்மையான அரசியல் நடவடிக்கைகளில் தரன் ஈடுபட்டுள்ளார்.

தர்மத்தின் வாழ்வை சூது கவ்வும் ஆனால் என்றாவது தர்மம் வெல்லும் என்ற தியாக சிந்தையுடன் வாழ்ந்து வரும் அவரிற்கு தெய்வ ஆசி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.சுண்டிக்குழி,**
**ஜகன்பாபு**

# இலவச தங்குமிட விடுதி உரும்பிராயில் திறந்து வைப்பு

(குப்பிழான்)

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கல்வி கற்பதற்கு நிதி ரீதியாக இடர்பாடுகளை எதிர்கொள்ளும் பல்கலைக்கழக மாணவிகளிற்கான இலவச உணவு, போக்குவரத்து, கணனி வசதியுடன் கூடிய தங்குமிட விடுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராயில் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் முல்லைத் தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குறித்த விடுதியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தற்போது புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் உரும்பிராயைச் சேர்ந்த கந்தசாமி சவுந்தாமணி தம்பதியர் தமது உரும்பிராயில் உள்ள வீட்டினை இவ்வாறு இலவச தங்குமிட விடுதியாக உருவாக்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-18)



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. (படம்:- ரவிசாந்)

# வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷை மன்றில் முன்னிலையாக பணிப்பு

(யாழ்ப்பாணம்)

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு தடைகளை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ்க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டே வழக்கு மீள முன் னெடுக்கப்பட முடியும் என கடந்த வருட ஆரம்பத்தில் பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்த நிலையில் வழக்கு மீளவும் இன்று புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்டவர்கள் தடைகளை ஏற்படுத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக் கோவையின் பிரகாரம் இவ் வழக்கை சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தினைத் பொலிஸார் தாக்கல் செய்திருக்கவேண்டும் என தமது சமர்ப்பங்களை முன் வைத்தனர்.

அவ் வழக்கினை கடந்த வருடம் விசாரித்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை.

அத்துடன் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து இவ் வழக்கினை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கினைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

பிரதேச சபைத் தவிசாளர் இவ்வழக்கில் மேலதிக விசாரணைகள் தேவைப்படின் தவிசாளர் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தவிசாளர் ஒரு இலட்சம் ரூபாய் சொந்தப் பிணையில் செல்வதற்கும் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் மீளவும் இவ் வழக்கிற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை முதலாவது சந்தேக நபராக அடையாளப்படுத்தி மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. (4-18-33)

# கொடிகாமத்தில் வாள் வெட்டு இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கெற்பேலிப் பகுதியில் வசித்து வரும் குறித்த இளைஞன் தவசி குளம் பகுதியில் உள்ள தாய் வீட்டிற்கு வந்த சமயம் வாள்களுடன் வந்த குழுவொன்று இளைஞன் மீது வாள் வீச்சினை மேற்கொண்டு விட்டு தப்பித்துச் சென் றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அத்துடன் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரையும் கொடிகாமப் பொலிஸார் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-30)

# யாழ். சிறையிலிருந்து 7 கைதிகள் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஏழு கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களை புரிந்தவர்கள் மற்றும் தண்டப் பணம் செலுத்த தவறியவர்களே இவ்வாறு சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

நாடு முழுவதும் 173 கைதிகளுக்கு நேற்று பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்திருந்த நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஏழு கைதிகள் விடுவிக்கப்பட்டனர். (4-33)



யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்று முன்தினம் திங்கட் கிழமை ' வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்த பெருவிழாவில் பதுவைப் புனிதரான அந்தோனியார் தேரில் ஏறி வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஆசிர் வழங்கினார். (படங்கள்:-சிவசாந்தன்)

# மருத்துவரின் வீடு புகுந்து 8 பவுண் நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் மருத்துவரின் வீடுடைத்து 8 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த 12 ஆம் திகதி கோண்டாவில் இராச மாணிக்கம் மண்டபத்துக்கு அண்மித்தாக உள்ள வீட்டில் இடம்பெற்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவரின் வீட்டிலேயே இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் உள்ளவர்கள் நிகழ்வு ஒன்றுக்கு சென்று மாலை 5 மணிக்கு திரும்பிய போது வீடுடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களிடையே அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனை

## ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலை.பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

**இளைஞர்கள் மத்தியில் அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஞானதாச பெரேரா தெரிவித்துள்ளார்.**

குறிப்பாக அவர்கள் தற்போது மதுபானங்களின் விலைகள் அதிகரித்து வருகின்றமை காரணமாக மதுபானங்களுக்கு மாற்றாக கஞ்சா கலந்த போதையை தூண்டும் பொருட்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவற்றினை கட்டுப்படுத்த தவறினால் நிலைமை மேலும் மோசமடையக் கூடும் எனவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஞானதாச பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையேற்றம், அதிகரித்துள்ள சமூக மற்றும் பொருளாதார அழுத்தங்கள், மதுபானங்களின் விலையேற்றம் என்பன இதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ)

# மிச்செல் பச்லெட்டின்
## பதவிக்காலம் முடிவிற்கு வருகிறது



(கொழும்பு)

மீண்டுமொரு முறை ஆணையாளராக பதவி வகிக்கப்போவதில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்தார்.

மனித உரிமை பேரவையின் ஐம்பதாவது அமர்வுடன் தனது பதவிக்காலம் முடிவிற்கு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையாளர் என்ற பதவிக்காலம் முடிவிற்கு வருகின்றது. இந்த பேரவையின் ஐம்பதாவது அமர்வே நான் உலக நாடுகளின் மனித உரிமை நிலவரம் குறித்து அறிக்கை வெளியிடும், உரையாற்றும் இறுதி அமர்வாக காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு நெருக்கமான சிலியின் முன்னாள் ஜனாதிபதி மிச்செல் பச்லெட் தொடர்ந்தும் மனித உரிமை ஆணையாளராக பதவி வகிக்க வேண்டும் என விரும்புவதாக சில இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
## 579/4, சங்கரத்தை வீதி, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, சங்கரத்தை வீதியிலுள்ள இல. 579/4 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்புதிவேட்டின் பிரகாரம் **கணபதிப்பிள்ளை கந்தசாமி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை **ஏரம்பமூர்த்தி யோகராணி** பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1538/02.09.1979 ம் இலக்க உறுதியால் **தம்பிப்பிள்ளை ஏரம்பமூர்த்தியும் தம்பிப்பிள்ளை காசிப்பிள்ளையும் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியமும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**மகேந்திரன் பெண் கௌரி** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.நமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 245/24.10.2010ம் இலக்க உறுதியால் குறித்த **நாகரட்ணம் மோகனராஜனும் பெண் யோகராணியும் (முன்னாள் ஏரம்பமூர்த்தி மகள் யோகராணி)** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**மகேந்திரன் துஸ்யந்தனும் பெண் சியாமளாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு யோசப்குமார் சரண்யா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 255/02.11.2021ம் இலக்க உறுதியால் குறித்த **விசுவலிங்கம் மகேந்திரனும் பெண் கௌரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **மகேந்திரன் துஸ்யந்தனும் பெண் சியாமளாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மகேந்திரன் துஸ்யந்தனும் பெண் சியாமளாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(11868)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: சூரி 6 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Degree in Hotel Management (ஜேர்மனி)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/12716 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: சூரி 11 செவ் 10<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:ஆசிரியர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12720 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 4<br>கி.பா:சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Engineer கனடா<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/12718 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 48 சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/12723 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம் : மூலம் 3<br>கி.பா: 23½ சூரி 7 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12719 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: சூரி 12 செவ் 11 இல்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி ஆண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு:உயர் பதவி<br>தொ.இ:G/12724 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம் 1<br>கி.பா: 43 சூரி 7 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/ தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி. வைத்தியர் விரும்பத்தக்கது யாழ்.மாவட்டம் மட்டும்<br>தொ.இ: B/12722 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: சூரி 9 செவ் 11 இல்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்:Diploma in IT BBM Following<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி சைவபோசனம் மட்டும்<br>தொ.இ:G/12725 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 71

# அச்சம் தவிர்



ஒவ்வொரு ஆண்டும் ஒரு சிறுவனை அவனது பெற்றோர் கோடை விடு முறையில் அவனது பாட்டி வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.

ரயிலில் போகும் அவர்கள் 15 நாட்களுக்குப் பிறகு அதே ரயிலில் திரும்புவர்.

சில வருடங்களுக்குப் பிறகு உயர்நிலைப்பள்ளி யில் படிக்கும் வயது வந்ததும், அந்த சிறுவன் நான் இப்போது வளர்ந்திருக்கிறேன், இந்த வருடம் நான் தனியாக பாட்டி வீட்டிற்கு செல்கிறேன் என்கிறான்.

சிறிது யோசனைக்குப் பிறகு பெற்றோர் ஒப்புக்கொள்கிறார்கள். ரயில் நிலைய நடைமேடையில் நின்று, சிறுவனிடம் எப்படி பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அவனது தந்தை அறிவுரை கூற, "எனக்குத் தெரியும், நீங்கள் ஏற்கனவே என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறீர்கள்" என்றான் அந்த சிறுவன்.

ரயில் புறப்படத் தயாரான நிமிடம் தந்தை காதுக்கருகில் மெதுவாக "மகனே, வழியில் திடீரென்று மோசமாகவோ அல்லது பயமாகவோ உணர்ந்தால், இது உனக்கானது" என்று கூறி சட்டைப்பையில் ஒரு காகிதத்தை வைத்தார்.

பயண சந்தோசத்தில் சிறுவன் அதை கவனிக்கக் கூட இல்லை.

முதல் முறையாக பெற்றோர் இல்லாமல் தனியாக ரயில் பயணம், அந்த சிறுவனுக்கு உற்சாகமாகவும் திரில்லாகவும் இருந்தது.

ஓடும் ரயிலில் வேக வேகமாகப் பின்னோக்கி ஓடும் இயற்கையின் அழகை ஜன்னல் வழியாக ரசிக்கத் தொடங்கினான்.

கொஞ்ச நேரம் தான், கசகசவென சப்தம் அந்நியர்கள் வருவதும் போவதுமான சூழல், ஒருவருக்கு ஒருவர் உருவாக்கும் சப்தம், மெல்ல தான் தனியாக இருக்கிறோம் என்று சிறுவன் உணரத் தொடங்குகிறான்.

அடுத்த ஊரில் அருகில் இருந்தவர் இறங்கிக் கொள்ள புதிதாக வந்தவரின் சோகமான முகமும், எதிரே வந்து அமர்ந்தவரின் முரட்டுத் தோற்றமும் சிறுவனுக்கு சங்கடத்தைத் தருகிறது.

இப்போது கொஞ்சம் பயப்படத் தொடங்குகிறான். வயிறு வலிப்பது போல் தெரிகிறது. ரயிலின் வேகத்தைப்போல தடதடவென இதயம் கொஞ்சம் வேகமாகத் துடிப்பது போல் இருக்கிறது.

ஜன்னலோர இருக்கையில் தலையை தாழ்த்தி, மூலையில் பதுங்கிக்கொள்கிறான், அவன் கண்களில் கண்ணீர் எழுகிறது.

அப்போதுதான் அந்தச் சிறுவனுக்கு அவனது தந்தை, சட்டைப் பையில் எதையோ வைத்தது நினைவுக்கு வருகிறது.

நடுங்கும் கையால் அந்தக் காகிதத்தை எடுத்துப் பிரிக்கிறான், அதில், "பயப்படாதே மகனே, நான் அடுத்த பெட்டியில் இருக்கிறேன்" என்று எழுதி இருந்தது.

கற்பனை செய்ய முடியாத நம்பிக்கையின் அலை முகத்தில் எழுகிறது. பயம் அகன்று நம்பிக்கையின் புதிய கதிர் புன்னகைக்கிறது.

பயத்தில் குனிந்த தன் தலையை உயர்த்தி, அதே அந்நியர்களுக்கு மத்தியில் மிகவும் வசதியாக நிமிர்ந்து அமர்கிறான். இதே சூழல் தான் இப்போது நமக்கும் இருக்கிறது.

மகிழ்ச்சியாக வாழ்ந்த அதே ஊரில் அச்சத்தோடு இருக்கிறோம். நோயை விட, அது குறித்த அச்சம் தான் பலரை கொல்கிறது. எல்லோரும் இறைவனை நம்புகிறோம்.

நிச்சயமாக அவன் நம்மை நிராதரவாக விட மாட்டான் என்ற உறுதி எல்லோருக்கும் இருக்கிறது. இந்த உலகத்திற்கு நம்மை அனுப்பியபோது, நம் இதயத்தில் இறைவன் ஒரு காகிதத்தை வைத்திருக்கிறான்.

அதில் உன்னோடு நான் இருக்கிறேன், உன்னோடு பயணம் செய்கிறேன், என்று எழுதி இருக்கிறது.

கேட்கும் கைகளை வெறும் கையாக விடமாட்டேன் என்று நம் இறைவன் நம்பிக்கை தருகிறான். எனவே, பீதியும், மனச்சோர்வும் அடையாமல் இருப்போம். பயமும் அச்சமும் நமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பாதிக்கும்.

உலகம் பிழைக்கப் போராடும் இந்த நிச்சயமற்ற காலத்திலும் நம்பிக்கையோடு இருப்போம்...



Kayalvizhi Suthakaran

## 70 இணையத்தளங்கள் இந்தியாவில் முடக்கம்

(டில்லி)

இந்தியாவில் அரச மற்றும் தனியாருக்கு சொந்தமான 70 இற்கும் மேற்பட்ட இணையத்தளங்கள் ஹேக்கர்களால் முடக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாயகம் பற்றி ப.ஜ.கவைச் சேர்ந்த நுபர் சர்மா சர்ச்சைக்குரிய வகையில் பேசியதை கண்டித்து இச்செயலில் ஈடுபட்டுள்ளதாக ஹேக்கர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக இஸ்ரேலுக்கான இந்திய தூதரகம், தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை அமைப்பு, இந்திய வேளான் ஆராய்ச்சி கவுன்சில், நாக்பூரிலுள்ள அறிவியல் கல்வி நிறுவனம், டெல்லி பப்ளிக் ஸ்கூல் உள்ளிட்ட பல அமைப்புக்களின் இணையதளங்கள் கடந்த சில நாட்களில் முடக்கப்பட்டுள்ளன.

மகாராஷ்டிராவில் மட்டும் 50 இற்கும் அதிகமான இணையதளங்களில் ஹேக்கர்கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

டிராகன் போர்ஸ்மலேசியா என்ற பெயரில் இணையதளங்களை முடிக்கியுள்ள ஹேக்கர்கள், "உங்களுக்கு உங்கள் மதம்? எனக்கு என் மதம்?" என ஓடியோ மற்றும் வாசகங்களை வெளியிட்டுள்ளனர். (நி)

## 35 ஆண்டுக

## 10 ஆண்டுக

(ஸ்டாக்ஹோம்)

உலக நாடுகளிடமு

ஆண்டுகளில் அதிகரி

சுவீடனிலுள்ள ஸ்டாக்ஹோம் அமைதி ஆராய்ச்சி நிறுவனம் பல்வேறு நாடுகளின் அணு ஆயுத குவிப்பு குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

'எஸ்.ஐ.பி.ஆர்.ஐ. ஆண்டு புத்தகம்

# உக்ரைன் கிழக்குப் பகுதி விரைவில் ரஷ்யா வசம்



(கீவ்)

உக்ரைனின் கிழக்கு பிராந்தியத்தை இலக்கு வைத்து ரஷ்ய படைகள் அகோர தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் உக்ரைனின் அனைத்து தொடர்பாடல்களையும் துண்டித்து பின்னர் முன்னேறித் தாக்கும் போர் யுக்தியை கையாண்டு வருவதாகவும், இந்த யுக்தியின் அடிப்படையில், முதலில் உக்ரைனிடம் காணப்பட்ட வெளிநாட்டு ஆயுதங்களின் சேமிப்பு கிடங்குகளை தேடி அழிக்கும் முயற்சியில் ரஷ்ய படைகள் செயற்பட்டதாகவும் தெரியவருகிறது.

அதில் தமக்கு வெற்றி கிடைத்து விட்டதாகவும், போர் நடைபெறும் செவர்டோடென்ஸ்ட் பகுதியில் காணப்பட்ட பாரிய ஆயுத கிடங்குகளை தாம் தாக்கி அழித்துள்ளதாக தெரிவித்த ரஷ்ய படைகள் தற்போது மற்றுமொறு யுக்தியிலும் வெற்றி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

யுத்தம் நடைபெறும் செவர்டோடென்ஸ்ட் பகுதியை லிசிஷாங் என்ற நகருடனும் தொடந்து மேற்படி இரண்டு நகரங்களையும் உக்ரைனின் மேற்கு பிராந்தியத்துடன் இணைக்கும் மூன்று பிரதான பாலங்களை முற்றாக தாக்கி அழித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக உக்ரைன் படைகளின் வெளித் தொடர்புகள் முற்றாக செயலிழந்திருக்கும் நிலையில் விரைவாக கிழக்கு பிராந்தியத்தையும் தொடர்ந்து மேற்கு எல்லைகளையும் கைவசப்படுத்த முடியும் என ரஷ்யா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சிறிய அளவில் தற்போது முன் னேறிக் கொண்டு இருக்கின்ற ரஷ்யா, பாலங்களை தகர்த்ததன் பின்னர் வேகமான முன்னேற்றத்தை காட்டுவதாகவும், உக்ரைன் படைகள் தொடர்ந்தும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் போர்க்கள செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கிழக்கு பிராந்திய நிலப்பரப்பில் 70 - 80 வீதமான பகுதியை தாம் கைவசப்படுத்தியிருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...களாக குறைந்து இருந்த அணு ஆயுத உற்பத்தி ...களில் மீண்டும் உயரும் - நிபுணர்கள் எச்சரிக்கை

**...முள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை அடுத்த 10 ...ரிக்கும் என நிபுணர்கள் கணித்துள்ளனர்.**

2022' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

35 ஆண்டுகளாக குறைந்து இருந்த அணு ஆயுத உற்பத்தி உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக மீண்டும் உயரும் என நிபுணர்கள் இதன்போது கணித்துள்ளனர்.

உலகளவில் தற்போது அமெரிக்கா, இந்தியா உட்பட 9 நாடுகள் அணு ஆயுதங்களை வைத்துள்ளன.

அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, சீனா, இந்தியா, பிரான்ஸ், பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வட கொரியா ஆகிய 9 நாடுகளிடம் மொத்தம் 12 ஆயிரத்து 705 அணு ஆயுதங்கள் கையிருப்பில் உள்ளன.



உலக அளவில் அதிகபட்சமாக ரஷ்யாவிடம் 5 ஆயிரத்து 977 அணு ஆயுதங்கள் உள்ளன.

அடுத்தப்படியாக அமெரிக்காவிடம் 5 ஆயிரத்து 428 அணு ஆயுதங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## உணவு ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டாம்

### ஐ.நா கோரிக்கை

(ஜெனீவா)

உலகலாவிய ரீதியில் உணவு பாதுகாப்பு நெருக்கடிக்கு மத்தியில் மனிதாபிமான நோக்கங்களுக்காக உணவு ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டாம் என ஐக்கிய நாடுகள் சபை உலக வர்த்தக அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளிடம் கோரியுள்ளது.

உக்ரைனில் ரஷ்யா மேற்கொள்ளும் போர் காரணமாக மில்லியன் கணக்கான. மக்கள் உணவின்மையை எதிர்நோக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மிச்செல் பெச்லெட் மற்றும் அதன் வர்த்தக மற்றும் அபிவிருத்தி தலைவர் ரெபேக்கா, க்ரின்ஸ்பென் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த வாரம் ஜெனிவாவில் இடம்பெறும் உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் ஒருமித்த தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு முயற்சிக்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் ஆபிரிக்கா நாடுகள் தங்களுக்கு தேவையான உணவில் 80 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ததாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதானி சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)


## உக்ரைனுக்கு எதிரான போரில் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியது ரஷ்யா

### சர்வதேச மன்னிப்புச் சபை தகவல்

(வோஷிங்டன்)

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல் 110 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இந்த மோதலில் இரு நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள், இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்து உள்ளனர்.



இந்நிலையில், குறித்த மோதலில் வட கிழக்கு உக்ரைனிய நகரமான கார்கீவில் கண்மூடித்தனமான ஷெல் மற்றும் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தி ரஷ்யா நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொன்றதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் 9N210/ 9N235 கிளஸ்டர் குண்டுகள் மற்றும் சிதறக்கூடிய வெடி மருந்துகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## வடக்கு புர்கினா பாசோவில் ஆயுததாரிகள் தாக்குதல்

### 50 பேர் சுட்டுக்கொலை





(புர்கினா பாசோ)

வடக்கு புர்கினா பாசோவில் உள்ள ஒரு கிராமத்தில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் சுமார் 50 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டின் அரசாங்க பேச்சாளர் தெரிவித்தார். அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ்.ஐ.எல் ஆகியவற்றுடன் தொடர்புடைய போராளிகள் உள்ள எல்லைப் பகுதிகளில் கடந்த சனிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இந்த தாக்குதலைக் கண்டித்துள்ள அதேவேளை நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளது. (நி)

## ஒவ்வொரு சிகரெட்டிலும் அபாய எச்சரிக்கை அச்சீடு

Proposed Health-related Messages - Cigarettes




(ஒட்டாவா)

ஒவ்வொரு சிகரெட்டிலும் புகைப்பிடிப்பதன் தீங்கு குறித்த அபாய எச்சரிக்கையை அச்சிடுவதைக் கட்டாயமாக்க கனேடிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சிகரெட் பெட்டிகள் மீது புகைப்பதால் உடல்நலத்துக்கு ஏற்படும் அபாயம் குறித்த எச்சரிக்கையை அச்சிடுவது 20 ஆண்டுகளுக்கு கனடாவில் கட்டாயமாக்கப்பட்ட போதும், தற்போது உலகிலேயே முதல் முறையாக இவ்வாறான தொரு நடவடிக்கையை கனடா எடுத்துள்ளது.

இது குறித்து மனநலத் துறை அமைச்சர் கரோலின் பெனட் கூறுகையில், 'சிகரெட் பெட்டிகள் மீது அபாய எச்சரிக்கை பொறிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய தாக்கம் இத்தனை ஆண்டுகளில் மறைந்து போயிருப்பதற்கான வாய்ப்புள்ளது.

இந்தச் சூழலில், ஒவ்வொரு சிகரெட்டிலும் அபாய எச்சரிக்கை இருந்தால், அந்தத் தகவல் இன்னும் அதிக அளவில் மக்களை சென்று சேரும் என தெரிவித்தார்.

உலகிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தவிருக்கும் இந்த திட்டம், அடுத்த ஆண்டின் மத்தியிலிருந்து அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிங்களவர் கூட வாழாத குருந்தூர் மலையில்

# எதற்கு விகாரை அமைக்க வேண்டும்

## பொருளாதார சிக்கலுக்கு மத்தியிலும் இனவாதம் குறையவில்லை என்கிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவலநிலைக்கு எதிராக எழுச்சி பெற்றுள்ள மக்கள் போராட்டத்தை திசைதிருப்ப இனவாதத்தைக் கையிலெடுத்துள்ள அரசாங்கம் தனது முழுமையான அனுசரணையுடன் குருந்தூர் மலையில் நீதிமன்ற தடையையும் மீறி கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்ய முயற்சித்துள்ளது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.**

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ் அறிக்கையில்,

2008-2009 ஆம் ஆண்டுகளில் நடந்த யுத்த இறுதிக்காலத்தின் பொழுது, இது மனிதாபிமானத்திற்கான ஒரு யுத்தம் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக, இராணுவத்தினரின் ஒரு கையில் துப்பாக்கியும் மறு கையில் பாடசாலை சிறுமியின் படத்தையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதன் மூலம் இலங்கை இராணுவம் என்பது சிறுவர்களின் கல்வி தொடக்கம் அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகளிலும் அக்கறை செலுத்துவதாக உலகத்திற்குக் காட்ட இலங்கை அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் அதே யுத்தத்தை நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினரின் இன்றைய ஆட்சி அதிகாரத்தின் கீழ் குழந்தைகளுக்கான பாடசாலைப் புத்தகங்கள் இல்லை, அப்பியாசக் கொப்பிகள் இல்லை, பாடசாலை உபகரணங்கள் இல்லை என்ற நிலைக்கு முழு நாட்டையும் தள்ளியிருக்கிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு-கிழக்கில் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை அன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருந்தனர். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஆயுதப் படைகளின் துணையுடன் அடக்கியொடுக்கினார்கள். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக பாரிய யுத்தத்தைக் கொண்டு நடத்தினார்கள். இதனால் ஒட்டுமொத்த நாடும் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருட்கள், உயிர்காக்கும் மருந்துகள் இன்றி தவிக்கின்றது.

கடந்த சில மாதங்களாக இந்தியா ஏறத்தாழ மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசி, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் பசளை போன்றவற்றை வழங்கி வருகிறது. அந்த உதவிகள் அடுத்த சில நாட்களில் முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளது. இதன் பின்னரான காலப் பகுதியில் ஏற்படப் போகின்ற தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எத்தகைய திட்டமும் தீட்டப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

அடுத்தடுத்த வாரங்களுக்கு எரிபொருள் கிடைக்குமா? எரிவாயு கிடைக்குமா? மின்சாரம் த்டையின்றி கிடைக்குமா? அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்குமா? உயிர் காக்கும் மருந்துகள் தடையின்றி கிடைக்குமா? என்பது நிச்சயமற்ற நிலையில் அச்சமான சூழல் நிலையே நிலவுகின்றது.

நாட்டின் இவ்வளவு சீர்கேடுகளுக்கு மத்தியில் நாட்டின் உண்மையான பிரச்சினைகளை அடையாளம் காணாமல், இன்னும் சிங்கள, தமிழ் கலவரங்களை உருவாக்கி, மக்களை திசைதிருப்பி, அவர்களை ஒருவருக்கொருவர் மோதவிட்டு இனவாதத்தில் குளிர் காயத்தான் முயற்சி செய்கின்றீர்கள். ஒரு சிங்கள மகன் கூட இல்லாத குருந்தூர் மலையில், காலாகாலமாக சைவ மக்கள் சிவவழிபாட்டை நடத்தி வரக் கூடிய அந்தமலையில், நீதிமன்றத் தடைகளையும் துச்சமென மதித்து, பாரிய பௌத்த தாது கோபுரத்தை எழுப்பியதன் நோக்கமென்ன? இது ஒருதொல்பொருள் அமைவிடமாக இருந்தால் அது ஒரு தொல்பொருள் இடமாகப் பராமரிக்கப்பட வேண்டுமே தவிர, அதனை ஒரு பௌத்த இடமாக மாற்றுகின்ற உங்களது மேலாதிக்க சிந்தனை என்பது நாட்டை மேலும் மேலும் சீரழிக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு நாட்டை நாசமாக்கிய இரண்டரை வருடங்களின் பின், இப்பொழுது மீண்டும் பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்குவதற்கான 21 ஆவது திருத்தம் பற்றிப் பேசுகிறார்கள்.

இவற்றையெல்லாம் தாம் விரும்பியவாறு விரும்பியவுடன் அரசாங்கத்தாலும் எதிர்க்கட்சியாலும் செய்ய முடியுமாக இருந்தால், ஒரு முறையான அதிகாரப்பகிர்வினூடாக, எழுபதாண்டுகால இன மோதலுக்கான நிரந்தரத் தீர்வை ஏன் காண முடியாது? என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# வவுனியா சிறையிலிருந்து

# 6 பேர் விடுவிப்பு

(நெளுக்குளம்)

பொசன் தினத்தினை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று 6 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறு குற்றங்களுடன் தடுத்து வைக்கப்பட்ட 6 சிறைக்கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட நபரொருவருக்கு பிறிதொரு வழக்கும் இருந்தமையினால் அவர் மீண்டும் விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (4-299)

# வவுனியாவில் பெண்ணை கடத்தி கப்பம் கோரிய நால்வர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா வாரிகுட்டியூரில் இருந்து 55 வயதுடைய பெண்ணை கடத்தி 5 இலட்சம் ரூபாய் கப்பம் கோரிய நான்கு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணொருவரை கடத்தி சென்று பெண்ணின் மகளை தொலைபேசியில் அழைத்து 5 இலட்சம் ரூபாய் பணம் கேட்ட குழுவொன்று தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், குறித்த பெண்ணிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-299)

## கனிய மணல் அகழ்வு

# மன்னார் அரச அதிபருக்கு செல்வம் எம்.பி.கடிதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.


இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டிமெலிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் இல்மனைட் கனிம வள மண் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் இல்மனைட் மணல் அகழ்வுக்கு பாரிய எதிர்ப்புகள் இருந்தும் கூட அதற்கு எந்தத் தடையும் இன்றி கனிம வள மணல் அகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. எனவே கலந்துரையாடல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும் குறித்த கலந்துரையாடல் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-285)




வரலாற்றுப் பிரசித்திபெற்ற முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாந்தம் இடம்பெற்று வரும் வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. இதேவேளை, இவ் வருடப் பொங்கல் உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் பக்திபூர்வமாகக் கலந்து கொண்டனர். (படங்கள்- ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆவது திருத்தம்

## ஜனாதிபதிக்கு சாதகமாகவே அமையும்

### ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் அது ஜனாதிபதிக்கு சாதகமாக அமையும்என வும், பாதகமாக அமையாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.


# உணவு நெருக்கடிக்கு

## உதவுமாறு பங்களாதேஷிடம் கோரிக்கை

(கொழும்பு)
இலங்கையில் எதிர் வரும் நாட்களில் ஏற்படக் கூடிய அரிசித் தட்டுப்பாடு மற்றும் உணவுப் பஞ்சத்தை தவிர்க்கும் நோக்கில் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி வழங்குமாறு பங்களாதேஷத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் சாதகமாக பதிலளித்துள்ள இலங்கைக்கான பங்களாதேஷத் தூதுவர் ஆரிபுல் இஸ்லாம், இலங்கையர்களுக்கு பங்களாதேஷத்தில் முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (நி)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 அரிசி மூடைகள் சிக்கின



(சிலாபம்)
நுகர்வோர் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சிலாபத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் 5 கிலோ கிராம் எடையுள்ள சம்பா அரிசியின் 100 மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதையடுத்துச் சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். (நி)

# எரிவாயு, எரிபொருள் கப்பலுக்கு

## கட்டணம் செலுத்த பிரதமர் இணக்கம்

(கொழும்பு)
எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றுக்கு அவசியமான டொலரை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இணங்கியுள்ளார்.

வங்கிகளுக்கு இடையில் நிலவிய தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டணங்களை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3,900 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலுக்கு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஏலம் பறிக்கச் சென்ற பெண் மாயம்

(நுவரெலியா)
இறக்குவானை- சூரிய கந்த தோட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், ஏலம் பறிக்கச் சென்று காணாமல் போயுள்ளார்.

49 வயதுடைய எஸ்.மனோரஞ்சனி என்ற பெண், கடந்த மூன்றாம் திகதி சூரியகந்த பகுதியினூடாக சிங்கராஜ வனப்பகுதிக்கு ஏலம் பறிக்கச் சென்றுள்ளார்.

தனது கணவன் மற்றும் மகனுடன் குறித்த பெண் சிங்கராஜ வனப்பகுதிக்குள் சென்று காணாமல் போனதாகவும், இதனையடுத்து அவரது கணவரும் மகனும் காட்டில் பல மணி நேரங்கள் தேடியும் மனோரஞ்சனியை கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் தந்தையும் மகனும் வீட்டுக்கு வந்து அயலவர்களிடம் தெரிவித்துள்ளதுடன், சூரியகந்த பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஊர் மக்களும் காட்டுக்குள் சென்று, அந்த பெண்ணைத் தேடிய போதிலும் அதில் எந்த விதமான பயனும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தார். (நி)

# வத்தளையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

(கொழும்பு)
மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் வத்தளை, எலகந்த பிரதேசத்தில் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதில் காயமடைந்த இளைஞர் ராகமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். சம்பவத்தில் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரொருவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# தற்காப்பு கலைக்கு தடை நீக்கம்

(கொழும்பு)
அங்கபோர் தற்காப்பு சண்டை கலைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, அதனை வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அங்கபோர் தற்காப்பு சண்டை கலைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க கடந்த 2019 ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதி வழங்கியது. எனினும் அந்த தடை நீக்கத்திற்கான வர்த்தமானி வெளியிப்படவில்லை.

இதனால், வர்த்தமானியில் வெளியிடுவது தொடர்பான யோசனையை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்திருந்ததுடன் அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கண்டி இராச்சியம் பிரித்தானியரின் காலனித்துவத்திற்கு உட்பட்ட போது, இந்த கலை தடை செய்யப்பட்டுள்ளதுடன் காலப் போக்கில் அது அழிந்து போனதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மண்ணெண்ணெயில் கலப்படம்

(கொழும்பு)
பலாங்கொடையில் இரண்டு மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெறப்பட்ட மண்ணெண்ணெயில் தண்ணீரில் கலந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தும்பகொட கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் தெரிவித்தார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 300 | 240 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 250 | 250 | 280 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 | 600 |
| தக்காளி | 800 | 700 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 150 | 140 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 200 | 350 | 380 | 400 |
| பூசணி | 140 | 160 | 140 | 180 |
| புடோல் | 250 | 200 | 240 | 300 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 450 | 320 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 650 | 400 | 600 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 160 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 240 | 200 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 350 |
| லீக்ஸ் | 200 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 360 | 300 | 350 | 350 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 1200 | 1100 | 800 | 1400 |
| போஞ்சி | 800 | 600 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 200 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 40 | 70 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 80 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 400 | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 240 | 240 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 70 | 80 |
| வல்லாரை | 20 | 100 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## இசையும் உணவும்

கோபாலனுக்கு சங்கீதம் மிகவும் பிடிக்கும். அதனால் அவன் பாடுவதோடு தன் பாட்டைப் பிறரும் கேட்க வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அவன் பாட்டு என்றாலே பெரியோர் முதல் சிறியோர் வரை அலறியடித்துக் கொண்டு ஓடி விடுவார்கள்.

ஏனெனில் அதைக் கேட்க சகிக்க முடியாது. அவனது பாட்டி நன்கு பாடக் கூடியவள். அவளிடம் அவன் போய் "பாட்டி! எனக்கு உன் சங்கீதம் கற்றுக் கொடு" என்றான். அதற்கு அவள் "ஏன்? நீதான் பாடிக் கொண்டிருக்கிறாயே" என்றாள். அவனும் "நான் பாடினால் மட்டும் போதாது. பிறரும் அதைக் கேட்டு ரசிக்க வேண்டும்" என்றான். பாட்டியும் "ஆரம்ப காலத்தில் நானும் உன்னைப் போலத்தான் தவித்தேன்.

நாளாக நாளாக எல்லோரும் முணுமுணுக்காமல் கேட்கலானார்கள். நீயும் என் வயதிற்கு வந்தால் உன் பாட்டை எல்லோரும் கேட்பார்கள்" என்றாள்.

கோபாலனும் "சரி. நீ பாடுவதைப் போல எனக்கும் கற்றுக் கொடு" எனக் கேட்டான். அவள் "எனக்கு பாடத்தான் தெரியும். சொல்லிக் கொடுக்கத் தெரியாதே. சமையல் வேண்டுமானால் கற்றுக் கொடுக்கிறேன்" என்றாள்.

கோபாலனோ "என்ன பாட்டி சங்கீதம் கற்றுக் கொடு என்றால் சமையல் கற்றுக் கொடுக்கிறேன் என்கிறாயே" என்றான். அவளும் "உன் சமையலை ருசித்துச் சாப்பிட யாராவது வருவான். அப்போது அவனுக்கு பாடிக் காட்டலாம்" என்றாள். கோபாலனும் "இதற்கு நான் சமைப்பானேன்? ஒரு நல்ல சமையல்காரரை வைத்து சமைத்துப் போட்டால் போயிற்று" என்றான். பாட்டியோ "அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டும். அப்படியும் அவன் சமையலை ரசிப்பவர்கள் இருந்து உன் பாட்டைக் கேட்டு சாப்பிட்டா போவார்கள்" என்றாள். அவனும் பாட்டி சொன்னாளே என்று சமையல் கற்றுக் கொள்ளலானான். பதினாறு வயதிலேயே சமையல் கலையில் தேர்ந்து விட்டான்.

அவன் பாட்டியிடம் "இனிமேலாவது எல்லோரையும் கூப்பிட்டு சாப்பாடு போட்டு அவர்களுக்கு பாடிக் காண்பிக்கட்டுமா?" என்று கேட்டான். பாட்டியும் "நீ மட்டும் அப்படிச் செய்தால் உன் அப்பா உன்னையும் என்னையும் இந்த வீட்டை விட்டே துரத்தி விடுவார். இதற்காக நீயாகச் சம்பாதித்து செலவு செய்ய வேண்டும். நீ தின்பண்டங்கள் செய்து விற்றால் பணம் கிடைக்கும்" என்றாள்.

கோபாலனும் "நான் சமையல் கற்றுக் கொண்டது வியாபாரத்திற்காக அல்லவே. என் பாட்டைப் பிறர் கேட்க வேண்டும் என்பதற்காகத் தானே" என்றான். பாட்டியும் "இதற்காகத்தான் நீ தின்பண்டங்கள் செய்து விற்றால் உன் பாட்டைக் கேட்பார்கள்" என்றாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




அரண்களைப் பற்றியும் முரண்களைப் பற்றியும் பேசி அறிந்தான்; இராவணன் செயற்றிறனையும் ஆற்றலையும் அவன் நீக்குப் போக்குகளையும் கேட்டு அறிந்தான்; அவன் குறைகளையும் நிறைகளையும் அவன் உரைகளால் அறிந்தான்; இலங்கையைப் பற்றி அறிய அவன் எழுதாத வரைபடமாக விளங்கினான்.

வானரப் படைகளும் அங்கதன் முதலிய படைத்தலைவர்களும் அனுமனிடம் அளவிலா மதிப்பும் கணிப்பும் வைத்திருந்தனர்; அவன் ஆற்றலிலும் செயற்றிறனிலும் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர்; "கடலைக் கடப்பதற்கு அவன்தான் தக்க விடை சொல்ல வேண்டும்" என்று எதிர்பார்த்தனர். "கடலைக் கடப்பது எப்படி? வழிவகைகள் யாவை?" இவை பற்றிச் சீதை மணாளன் சிந்தித்தான்; முல்லை நிலத்துக்குக் கண்ணனும், மலைக்கு முருகனும், மருதத்துக்கு இந்திரனும், பாலைக்குக் காளியும் வழிபடு[illegible]வங்களாய் இருப்பது போல, நெய்தல் நிலத்துக்கும், நீலக் கடலுக்கும் தெய்வம் வருணன் என்பது நினைவுக்கு வந்தது. அவன் பெயரால் மந்திரம் சொல்லிச் சென்று 'கடலில் வழிதருக' என்று விளம்பினான்; அலை ஓசையில் அவன் காதில் இரா[illegible] விழவில்லை.

வாய்ச் சொல்லுக்குச் செவிசாய்க்காத செவிடலை! வழிக்குக் கொண்டு வரக் கைவில்லுக்கு ஆணை பிறப்பித்தான்; இராமன் நாண் ஏற்றினான்; பிரம்ம அஸ்திர நேத்திரத்தைத் திறந்தான்; ஏவியகணை அவன் ஆவியை வாங்க அவனை அணைந்தது. அலறி அடித்துக் கொண்டு அடக்க ஒடுக்கமாய் அண்ணல் இராமன் முன் வந்து நின்றான் வருணன். அலை அடலுக்கு அப்பால் தன் ஆணையைச் செலுத்தியதால், இப்பால் என்ன நடக்கிறது? என்பதை அவனால் கவனிக்க முடியவில்லை" எனத் தெரிவித்தான்; தன்னை மன்னிக்கும்படி வேண்டினான்.

கடல்நீரை அம்பு கொண்டு வற்றச் செய்துவிட்டால், காடுகள் இல்லாமல் போய் விடும்; மழை தன் இருப்பைச் சேர்த்து வைத்திருக்கும் வங்கிதான் கடல், வங்கி பொய்த்து விட்டால், மேகங்கள் முடமாகி விடும்; வான் மழை பொய்த்தால் தருமம் ஏது? நீரில் வாழ் உயிர் அழியும்; நிலத்தில் பயிர் ஒழியும்; "நீரின்று அமையாது உலக வாழ்க்கை" என்ற பழந் தமிழ்ப் பாட்டைச் சொல்லி இராமன் விட்ட அம்பை அடக்கிக் கொள்ள வேண்டினான் வருணன்.

"கடல் பிழைத்தது; அதன் மேல் அணை அமைத்தால்தான் பாதையை அமைக்க முடியும்" என்றான்.

"இரகுராமனாய் விளங்கும் அவன், சேதுராமனாய் மாற வேண்டும்" என்றான் 'சிங்களத் தீவுக்கும் இந்தியத் துணைக் கண்டத்துக்கும் சேது அமைப்பது உறுதியாகியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். – லெனின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விமான, கப்பல் சேவைகளை உடனடியாக ஆரம்பியுங்கள்

பலாலியில் இருந்து திருச்சிக்கான விமான சேவையை மேற்கொள்வதற்கும் காங்கேசன்துறை – பாண்டிச்சேரிக்கிடையில் கப்பல் சேவையை நடத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

பலாலியில் இருந்து இந்தியாவுக்கான விமான சேவையையும் காங்கேசன்துறையில் இருந்து இந்தியாவுக்கான கப்பல் சேவையையும் ஏலவே நடத்தியிருந்தால், இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கும்.

பரவாயில்லை. இப்போதாவது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை மன ஆறுதலைத் தருகிறது.

திருச்சிக்கான விமான சேவையையும் காங்கேசன்துறையில் இருந்து பாண்டிச்சேரிக்கான கப்பல் சேவையையும் நடத்தும்போது, வடபுலத்து மக்களின் நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இடமாகத் தமிழகம் இருக்கும்.

இஃது ஒட்டுமொத்த இலங்கைக்கும் சாதகமாக அமையும்.

எனினும் எதையும் இனவாதத்துடன் நோக்குகின்ற சிங்களப் பேரினவாதிகள் பலாலியில் இருந்து இந்தியாவுக்கான விமான சேவையை காலம் கடத்தி வந்தனர்.

பலாலி சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்துவிட்டு, விமான சேவையை நடத்தாமல் காலம் கடத்தியவர்களுக்கு இப்போதாவது அதன் தாக்கம் புரிந்திருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, பலாலியில் இருந்து இந்தியாவுக்கான விமான சேவையை நடத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமைக்கு இலங்கை ஆட்சியாளர்கள் வந்துவிட்டனர்.

உண்மை, இந்தியாவின் உதவி இல்லை என்றால், இலங்கையின் கதி அம்போ என்றாகியிருக்கும்.

இப்போதுகூட இந்தியாவின் உதவியை நாடுகின்ற அளவிலேயே இலங்கையின் நிலைமை இருக்கிறது.

எதுவாயினும் இந்தியாவுக்கான விமானம் மற்றும் கப்பல் சேவைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கிவிட்டதென்பதற்காக அது நடைமுறைக்கு வந்துவிட்டதென யார் நினைத்தாலும் அது மகாதவறு.

இலங்கை அமைச்சரவை எடுக்கின்ற தீர்மானங்கள் அமுலாக்கமின்றி அப்படியே கிடப்பில் கிடக்கின்ற நடைமுறைகளும் உண்டு.

எனவே அப்படியானதொரு நிலைமை பலாலி விமான சேவைக்கும் காங்கேசன்துறை கப்பல் சேவைக்கும் வந்துவிடக்கூடாது.

ஆகையால் பலாலி – திருச்சி விமான சேவை மற்றும் க்ாங்கேசன்துறை – பாண்டிச்சேரி கப்பல் சேவை என்பவற்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கு இந்தியா அதிவேக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்குறித்த விமான – கப்பல் சேவைகள் இடையறாது நடைபெறுமாக இருந்தால், பொருளாதார நெருக்கடியில் இருந்து வடபுலத்து மக்கள் தங்களை ஓரளவேனும் பாதுகாத்துக் கொள்வர்.

இந்த ஏற்பாடு நாட்டின் ஏனைய இடங்களிலும் சாதகமான சூழமைவை ஏற்படுத்தும் என்பதுடன் நாடு, டொலர் பிரச்சினையில் இருந்து சற்றேனும் ஆறுதல் அடைவதற்கு இது உதவியாக அமையும்.

### தொடர்ச்சியான போராட்டங்களால்

# கண்ணீர்ப் புகை குண்டுகளுக்கான தேவை நாட்டில் அதிகரித்துள்ளது

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

இலங்கையில் கண்ணீர்ப் புகை குண்டுகளுக்கான தேவை அதிகரித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் பொலிஸாரும் ஆர்ப்பாட்டக்காரர்களும் அதிகமாக கண்ணீர்ப் புகை பிரயோகத்தை மேற்கொண்டமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மட்டுமின்றி போராட்டக்காரர்களும் கண்ணீர்ப் புகை குண்டுகளை பயன்படுத்தியதால், இரு தரப்பிலும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கான தேவை அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# ஹர்சவின் கருத்தை நிராகரித்தார் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கைக்கு உதவுமாறு மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை ஏற்பதற்கு சவுதிஅரேபியாவின் முடிக்குரிய இளவரசர் மறுத்துவிட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்திருப்பது உண்மையல்ல என மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஹர்ச டி சில்வா எனது நீண்டகால நண்பர். நாங்கள் அடிக்கடி சந்திப்போம், அவரை சந்திப்பது எனக்கு விருப்பமான விடயம். ஆனால் ஊடகங்களில் வெளியான செய்தி உண்மையில்லை என முகமட் நசீட் தெரிவித்துள்ளார்.

பலநாடுகள் இலங்கைக்கு உதவ தயாராகவுள்ளன என நான் நம்புகின்றேன். உதவிகள் கிடைக்கும் என மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

### கண்டியில் காணாமல்போன

# 14 வயதுடைய சிறுமி

### யாழ்.பஸ் தரிப்பிடத்தில் கண்டுபிடிப்பு

(கண்டி)

கலஹா - ஹயிட் தோட்டத்தில் காணாமல்போன 14 வயது சிறுமி, 6 நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராசலிங்கம் பிரியதர்சினி என்ற 14 வயது சிறுமியே இவ்வாறு யாழ்ப்பாணம்பஸ்தரிப்பிடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுமி காணாமல்போனமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தியை அவதானித்த வர்த்தகர் ஒருவர், சிறுமி பஸ் தரிப்பிடத்தில் நின்றிருப்பதைக் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து சிறுமியைப் பொறுப்பேற்ற யாழ். பொலிஸார் அவரை கலஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு, அவர் கண்டி வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் இன்று புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்றும் கலஹா பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# சீனாவிலிருந்து இலங்கைக்கு அரிசி

மனிதாபிமான உதவியின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள அரிசித் தொகையின் முதற்கட்டம் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

இந்த அரிசித் தொகை எதிர்வரும் சில தினங்களுக்குள் இலங்கைக்குக் கிடைக்கும். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணும் நோக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சீன வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி வியாழன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிளிநொச்சி மருத்துவமனை, ஆனந்தபுரம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, இலங்கை மின்சார சபை உபமின் நிலையம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** நெளுங்குளம் நீர்வழங்கல் சபை, நந்தெனிய கல்லுடைக்கும்ஆலை, தொழிற்பேட்டை-பூந்தோட்டம், அறுகம்புல்வெளி அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், நாகர் இலுப்பை குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னகுளம், பாவற்குளம், பெரிய உளுக்குளம், உளுக்குளம் தீவரகம, பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம் பல் தோட்டம் வீட்டுத்திட்டம், சூடுவெந்த் புலவு தொலைத்தொடர்பு கோபுரம், சூடுவெந்தபுலவு, துடாரிக்குளம், ட்ராக் 07, பாவற்குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு, விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



# வித்தியாசாகரைச் சந்தித்தல்

ஸ்ரீராம கிருஷ்ணர் ஈசுவர சந்திர வித்யாசாகரைச் சிந்திக்க கல்கத்தாவில் அவரது வீட்டை நோக்கி வண்டியில் சென்று கொண்டிருந்தார். பவநாத், ம-, ஹாஸ்ரா முதலியோர் உடன் சென்றனர்.

குருதேவர் ஹுக்ளி மாவட்டத்தில் காமார்புகூர் என்ற கிராமத்தில் பிறந்தவர். அதன் அருகே உள்ள வீர்சிங் என்னும் கிராமத்தில் தான் வித்யாசாகர் பிறந்தார்.

குருதேவர் இளமையிலேயே வித்தியாசாகரின் கருணை உள்ளத்தைப்பற்றி கேள்விப்பட்டிருந்தார். தற்சினேஸ்வர கோவிலுக்கு வந்த பிறகு அவருடைய பல்வேறு சிறந்த குணங்களையும் தான தர்ம செயல்களையும் அதிகமாக கேள்விப்பட்டு அவரைக் காண வேண்டும் என்று பல நாட்களாக பெரிதும் ஆவல் கொண்டிருந்தார்.

ம- வித்தியாசாகரின் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார் என்று அறிந்ததும் வித்தியாசாகரிடம் என்னை அழைத்துச் செல்கிறாயா? [illegible] இருக்கிறது என்று குருதேவர் கேட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 07

1686-ரஷ்யாவிற்கும் போலந்துக்கும் இடையில் நித்திய சமாதான உடன்படிக்கையானது (Eternal Peace) ஒட்டோமான் பேரரசுடனான 37 ஆண்டுகால யுத்தத்தை இப்போதைய உக்ரைனில் முடித்து, ஹெட்மனேட்டைப் பிரித்துக் கொண்டன.

1917 - ரஷ்ய சாம்ராஜ்ஜியத்தின் சரிவைத் தொடர்ந்து கீவ்வில் மத்திய ராடா கவுன்சில் அமைக்கப்பட்டது. உக்ரைனின் மத்திய கவுன்சில் (மத்திய ராடா என்றும் அழைக்கப்படுகிறது) என்பது அனைத்து உக்ரைனிய கவுன்சில் (சோவியத்) ஆகும்.

கொசாக் கிளர்ச்சி






ஆஸ்திரியா-ஹங்கேரி உக்ரேனிய நிலங்களை இணைப்பதற்கு முன் உக்ரேனிய தேசிய குடியரசால் (Ukrainian National Republic- UNR) உரிமை கோரப்பட்ட பிரதேசங்கள் 1918

1708-09 ஆண்டுகளில் போலந்து மற்றும் சுவீடனுக்கு எதிராக ரஷ்யா நீடித்த பெரும் வடக்குப் போரின் போது, கிழக்கு ஹெட்மனேட்டை ரஷ்ய ஆட்சியிலிருந்து விடுவித்து சுதந்திரம் அடைய மஸெபாவின் (Mazepa) எழுச்சி முயற்சித்தது. 1764 - ரஷ்யா கிழக்கு ஹெட்மனேட்டை ஒழித்தது. 1781 இல் ஹெட்மனேட்டை பிரதேசத்தை முழுமையாக தன்னுடன் இணைக்கும் வரை சிறிய ரஷ்யா கவர்னரேட்டை (Little Russia governorate) ஒரு இடைநிலை நிறுவனமாக நிறுவியது.

**13 ஆம் நூற்றாண்டில் மங்கோலியப் படையெடுப்பு கீவியன் பேரரசை வீழ்த்தியது. அதன்பின் போலந்து, லிதுவேனியா, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் மன்னர்கள் உக்ரைனைப் பங்கு போட்டு பிரித்துக் கொண்டார்கள்.**

1772-1795 இல் மேற்கு உக்ரைனின் பெரும்பகுதி போலந்தின் பிரிவினையின் மூலம் ரஷ்யப் பேரரசில் உள்வாங்கப்பட்டது. 1783 - கிரிமியன் கானேட்டின் (Crimean Khanate) இணைப்பு மூலம் தெற்கு உக்ரைனை ரஷ்யா கைப்பற்றியது.

1772-1795 இல் மேற்கு உக்ரைனின் பெரும்பகுதி போலந்தின் பிரிவினையின் மூலம் ரஷ்யப் பேரரசில் உள்வாங்கப்பட்டது. 1783 - கிரிமியன் கானேட்டின் (Crimean Khanate) இணைப்பு மூலம் தெற்கு உக்ரைனை ரஷ்யா கைப்பற்றியது.

இது படையினர், தொழிலாளர்கள், பிரதிநிதிகள், உக்ரைனிய அரசியல், பொது, கலாசார மற்றும் தொழில்முறை அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட சபையாகும்.



ஜனவரி 1917 இல் கீவ்வில் ஒரு தேசியவாத பேரணி

1918 இல் உக்ரைன் சுதந்திரத்தை அறிவித்தது. உக்ரைனிய மக்கள் குடியரசு (Ukrainian People's Republic- UPR) பிறந்தது. இது உக்ரைனிய தேசிய குடியரசு (Ukrainian National Republic- UNR) என்றும் அழைக்கப்பட்டது. உக்ரைனிய மக்கள் குடியரசு கிழக்கு ஐரோப்பாவில் 1917 - 1920 இற்கு இடையில் இருந்தது.

**1917 - ரஷ்ய சாம்ராஜ்ஜியத்தின் சரிவைத் தொடர்ந்து 1918 இல் உக்ரைன் சுதந்திரத்தை அறிவித்தது. உக்ரைனிய மக்கள் குடியரசு பிறந்தது. உக்ரைனிய மக்கள் குடியரசு கிழக்கு ஐரோப்பாவில் 1917 - 1920 இற்கு இடையில் இருந்தது.**

மார்ச் 1917 இல், கீவ்வில் இருந்த தேசிய காங்கிரஸ் ரஷ்ய குடியரசின் மற்றப் பகுதிகளிலும் உள்ள அதே கொள்கைகளின் அடிப்படையில் சோஷலிஸ்ட் கட்சிகளைக் கொண்ட மத்திய கவுன்சிலை தேர்ந்தெடுத்தது. 1917 ஜூன் 23 இல் பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட உக்ரைனிய மக்கள் குடியரசு அறிவிக்கப்பட்டது. இக் குடியரசின் சுயாட்சி ரஷ்யவின் அப்போதைய தற்காலிக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. 22 ஜனவரி 1918 அன்று ரஷ்ய குடியரசில் இருந்து அதன் சுதந்திரத்தை அறிவித்தது. அதன் குறுகிய காலத்தில், குடிய ரசு பல அரசியல் மாற்றங்களைச் சந்தித்தது.

**1921 - உக்ரைனின் மூன்றில் இரண்டு பங்கு ரஷ்ய செம்படையைக் கைப்பற்றியபோது உக்ரைனிய சோவியத் சோசலிச குடியரசு நிறுவப்பட்டது. உக்ரைனின் மேற்குப் பகுதி போலந்தின் ஒரு பகுதியாக மாறியது.**

1921 - உக்ரைனின் மூன்றில் இரண்டு பங்கு ரஷ்ய செம்படையைக் கைப்பற்றியபோது உக்ரைனிய சோவியத் சோசலிசக் குடியரசு நிறுவப்பட்டது. உக்ரைனின் மேற்கு போலந்தின் ஒரு பகுதியாக மாறியது.

18 மார்ச் 1921 இல் இரண்டாம் போலந்து குடியரசு, சோவியத் ரஷ்யா மற்றும் சோவியத் உக்ரைன் இடையேயான ரிகா அமைதி (Peace of Riga) உக்ரைனிய மக்கள் குடியரசின் தலைவிதியை மூடியது.

ரிகா உடன்படிக்கை என்றும் அழைக்கப்படும் ரிகா அமைதி, போலந்து, சோவியத் ரஷ்யா (சோவியத் பெலாரஸ் சார்பாகவும் செயற்பட்டது) மற்றும் சோவியத் உக்ரைன் இடையே 18 மார்ச் 1921 அன்று ரிகாவில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் போலந்து-சோவியத் போரை முடி வுக்குக் கொண்டு வந்தது.

### 1922 இல் உக்ரைனிய சோவியத் சோசலிசக் குடியரசு

1922 இல் உக்ரைனிய சோவியத் சோசலிசக் குடியரசு உருவாகி சோவியத் ஒன்றியத்தின் நிறுவன உறுப்பினர் ஆனது.

இந்தப் பக்கம் சோவியத் யூனியன் கட்டுப்பாட்டில் இருந்த உக்ரைன் பகுதியில் மக்கள் அந்த மொழியைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர். உக்ரைனின் பாரம்பரியக் கலைகள், பண்பாடு எல்லாவற்றையும் மீட்கும் முயற்சியை அரசே ஆதரித்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமத்தில்...

பயணித்த நபர் கிளை ஒழுங்கை ஒன்றின் ஊடாக பயணிக்க முற்பட்ட வேளையில் அதேதிசையில் வந்த கார் பின்புறமாக மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30,60)

## சரசாலையில்...

இதில் 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவரே மரணமடைந்துள்ளார்.

வீட்டிற்கு அருகாமையில் உள்ள ஆலயத்திற்கு சென்று வணங்கிய பின்னர் நடந்து வீடு திரும்பிய வேளையில் உள் வீதி ஒன்றில் விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பெண்மணியின் சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## வெள்ளி...

குணவர்த்தன சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனினும் நீர் வழங்கல், சுகாதாரம், மின்சார விநியோகம், கல்வி, பாதுகாப்பு சேவைகள், போக்குவரத்து மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் இதில் உள்ளடங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்பொழுது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக பயணிகளுக்கு கடுமையான போக்குவரத்து பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால், அரச ஊழியர்களுக்கும் போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக வாரத்தில் கடமையாற்றும் ஒருநாளை அரச விடுமுறை தினமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

*(இது தொடர்பில் மேலும் ஒரு செய்தி உள்ளே)*

## எரிவாயு விநி...

மூவாயிரத்து 900 மெற்றிக் தொன் எரிவாயுவை தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எரிவாயு சிலிண்டர்கள் அனைத்தும் தரையிறக்கப்பட்டு, விநியோகிப்பதற்கு மேலும் சில தினங்கள் செல்லும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## பலாலி விமான...

சுற்றுலாத்துறை அதிகாரிகளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அடுத்த வருடத்தில் 8 இலட்சம் சுற்றுலாத்துறையினரை நாட்டுக்கு வரவழைப்பதற்கு எதிர்பார்ப்பதோடு, அதன்மூலம் 800 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கப் பெறக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவித்தது.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு இந்தியாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

3.5 பில்லியன் டொலர் வருமானத்தை எதிர்பார்க்கும் இலங்கையானது 2025 ஆம் ஆண்டளவில் சுமார் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என நம்பப்படுகிறது.

1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான நீண்டகால வேலைத்திட்டங்களை வகுக்குமாறும் பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார். (ம-7)

## டொலர்கள்...

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் என்ன கூறினாலும் நாட்டில் இன்னும் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை என்பதால், கடன்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும்.

தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான தீர்வு கடனை பெறுவது என்றால், அதனை பெற்றுக் கொள்ள நாட்டில் நம்பிக்கையான ஆட்சியை ஸ்தாபிக்க வேண்டும்.

கடனை திரும்ப செலுத்துவதை ஒத்திவைத்து, வெளிநாடுகளில் தொழில் புரிவோரிடம் இருந்து அதிகளவில் டொலர்களை பெற வேண்டும்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோரிடம் டொலர்களை பெற வேண்டிய தேவை இருந்தாலும் நாட்டில் திருடர்கள் இருக்கும்வரை மக்கள் டொலர்களை அனுப்பி வைப்பதை தவிர்ப்பார்கள்.

கடந்த காலங்களில் மாதாந்தம் 600 மில்லியன் டொலர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிவோரிடம் இருந்து கிடைத்தது. எனினும் தற்போது அந்த வருமானம் 200 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது.

இதனால், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நம்பிக்கையான அரசாங்கத்தை கோருகின்றனர் எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## அரிசி...

போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். குறித்த சுற்றிவளைப்புக்களை துரிதப்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுமாயின், பாதுகாப்புத் தரப்பினரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர், யுவதிகளின் தொழிலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அகில இலங்கை தொழிலற்றோர் சங்கத்தினர் இதன்போது அமைச்சரிடம் யோசனை முன்வைத்துள்ளனர். (ம-7)

## பழைய மட்டத்...

வித்துள்ளார்.

இளம் தொழில்சார் நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இளைஞர்களின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்யக்கூடிய நாட்டை கட்டியெழுப்ப நான் ஏற்றுக்கொண்ட சவாலை நிறைவேற்றுவேன். இந்த வருடத்தில் முடியாவிட்டாலும் 2024ஆம் ஆண்டு முதல் எதிர்பார்ப்புகளுடன் முன்நோக்கி செல்வதை ஆரம்பிக்க முடியும்.

நாம் சரியான வழியில் செல்ல வேண்டுமாயின் இந்த வருடம் கஷ்டமானதாக இருக்கும். 2023ஆம் ஆண்டு, இந்த ஆண்டை விட சிறிய முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.

2025 ஆம் ஆண்டு எமது வலுவான பொருளாதார பயணத்தை ஆரம்பிக்க முடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (ம-7)

## எரிபொருட்களின்...

அவர் கூறியுள்ளார்.

உலக சந்தையில் எண்ணெய்விலை உட்பட மேலும் பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அல்லது மாதத்துக்கு ஒருமுறை விலை சூத்திரத்துக்கு அமைய விலையில் மாற்றம் செய்யப்படும் என்று தெரிவித்தார். (ம-7)

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.14
சீட்டிழுப்பு இலக்கம் 095
துலாம் 07 36 40 55 துலாம்
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.06.14
சீட்டிழுப்பு இலக்கம் - 816
F 03 07 41 42
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/06/14
சீட்டிழுப்பு இலக்கம் 4786
B 5 4 5 2 9 8
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1264
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 7 2 9 7 6 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.14
சீட்டிழுப்பு இலக்கம் 3028
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 16 20 28 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1134
A 03 36 45 57 59

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1761 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.06.14 தினம் செவ்வாய்க்கிழமை
X 02 31 55 61
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 890,380/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.14
சீட்டிழுப்பு இல : 3922
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,337,620/-
வெற்றி இலக்கங்கள் 06 22 48 69 F

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 183
சீட்டிழுப்பு திகதி 2022.06.14 செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 19 40
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 682,880/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,051,321.20
திகதி 2022-06-14
வெற்றி வாரம் 3473
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 09 25 51 61 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,864,780/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 16 16 18 48 62
சீட்டிழுப்பு வாரம் 937
2022.06.14 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 242,263,669/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1587
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.06.14
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,326,040/-
வெற்றி இலக்கங்கள் 37 58 59 71 X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11873)

**076 825 7716** (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (11855)



**பணிநிலை வேண்டுகை**

அல்பம் பிரதியாக்கம் செய்தல், அல்பம் கட்டுதல் போன்ற துறைகளில் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சியின் போது 25,000/= உம் பயிற்சியின் பின் 40,000/= - 50,000/= வரை பெற முடியும். (11878)

**மூர்த்தி டிஜிற்றல்**

இல.62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

- 077 224 7428


# புதிய கட்சியை உருவாக்க பொன்சேகா திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய பிரதித் தலைவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தலைமையில் ஒரு புதிய கட்சியை உருவாக்குவதற்காக திட்டமிட்டு வருவதாக அரசியல் வட்டார தகவல்களின் மூலம் அறியமுடிகிறது.

நாட்டின் பாதுகாப்பு பிரிவில் சிரேஷ்ட பதவிகளை வகித்த பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் புதிய கட்சிக்கு ஆதரவளிக்க உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய பயணம் குறித்து, பொன்சேகாவும் அவரது நெருங்கிய பங்காளிகளும் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றும் அறியமுடிகிறது. (ம-7)


**காணி 6 வருட குத்தகைக்கு**

இல. 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆரியகுளச் சந்திக்கு அருகில், புகையிரத நிலையத்திற்கு நேர் எதிராக, ஆயுர்வேத கல்லூரி முன்பு இயங்கிய) 9 பரப்பு 10.7 குழி விஸ்தீரணமுடைய காணியும் கட்டடமும் 6 வருட குத்தகைக்கு வழங்கப்படும். (11877)

**075 041 2552**



**IELTS**

A Course that can change the course of your life!

- வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.
- நாங்கள் IELTS - Registration Centre for British Council

Contact : 077 880 3887
IELTS - PREPARATION CENTRE
PALALY ROAD - URUMPIRAI
(உரும்பிராய் - பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக) (C-4493)



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் துல்லியமாக கணித்து பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாடு, வெளிநாட்டுத் திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242
Laufen, Swiss
Tel : 0041768185443 | 0041615544242

வெளிநாட்டு மணமகன்களுக்கு மணப் பெண்கள் தேவை. (11876)

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
076 835 1932 / 021 223 2222



பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4410)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777



**உடனடி வேலை வாய்ப்பு**


யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4420)



சம்பளம் - 30'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777


## மரண அறிவித்தல்



தோற்றம் 24 - 11 - 1933

மறைவு 14 - 06 - 2022

### ஞானப்பிரகாசம் திருமேனி

(ஓய்வுபெற்ற சுகாதார உதவியாளர்)

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் திருமேனி அவர்கள் நேற்று (14.06.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பவளம் அவர்களின் அன்புக் கணவரும் அன்றா (சுவிஸ்), காலஞ்சென்ற றூபஸ் (லண்டன்), கௌரிமாலதி, யோஸ் கேமலதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரி, ஜெசி, கனகரத்தினம், ரவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபா, கொலினஸ், கலிஸ்ரன், டிலக்ஸன், சிவதர்சன், யோஸ், Roger, Paul, றாம்சி, லக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் லெவின், ஐலா, பிரணவி, ஒலிவர் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (15.06.2022) புதன்கிழமை நவாலி திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் மாலை 3.00 மணிக்கு இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் ஆரியம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 772 3808 (11879)

தகவல்: குடும்பத்தினர்


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் **கல்யாண மாலை**

சர்வதேச இலவச திருமண சேவை

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500/-



தொடர்பு - கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.